# TNPSC Tamil Current Affairs 10th May 2017

1. தென் கொரியாவின் புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்றவர் யார்?

A. Moon Jae-in

B. Hong Joon-pyo

C. Goh Kun

D. Roh Tae-woo

விடை : A. Moon Jae-in

முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளரான Moon Jae-in தென் கொரியாவின் 19வது ஜனாதிபதியாக பதவி ஏற்றார். இவருக்கு முன் இப்பதவியில் Park Geun-hye பணிபுரிந்தார். பதவியேற்ற பிறகு, South Jeollaவை மாகாண ஆளுநராகவும் Lee Nak-yonஐ பிரதமராகவும் நியமித்தார். மேலும், வடகொரிய பிரச்சினைகளில் நிபுணத்துவம் வாய்ந்த, நீண்டகாலமாக உளவுத்துறை அதிகாரியாக பணிபுரிந்த Suh-hoonஐ, தேசிய புலனாய்வு சேவையின் புதிய தலைவராக நியமித்தார்.

2. வேலைவாய்ப்பு கொள்கைகளுக்கான நம்பகத்தரவை வழங்க மத்திய அரசு எந்த உயர்மட்டக்குழுவை அமைத்துள்ளது?

A. புலக் கோஷ் குழு

B. TCA ஆனந்த் குழு

C. அரவிந்த் பனகாரியா குழு

D. மனிஷ் சபர்வால் குழு

விடை : C. அரவிந்த் பனகாரியா குழு

வேலைவாய்ப்பு கொள்கைகளுக்கு நம்பகமான தரவை வழங்குவதற்காக நிதி ஆயோக்கின் துணைத்தலைவர் அரவிந்த் பனகாரியாவின் கீழ் மத்திய அரசு ஒரு உயர்மட்டக்குழுவை அமைத்துள்ளது. இக்குழு ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் நடைமுறைப்படுத்தப்படக்கூடிய தீர்வுகளை பரிந்துரைக்கும். தற்போது, வேலைவாய்ப்புப் பற்றிய தரவு

சேகரிக்கப்பட்டு, தொழிற்துறை பணியகம் (Labour Bureau) உட்பட சில நிறுவனங்களால் வெளியிடப்படுகிறது, ஆனால், இதன் அளவு மிகச்சிறியதாகும். Labour Bureauவின் தரவுகள் ஒரு சில துறைகளை மட்டுமே உள்ளடக்கியது, மேலும், இது புதிதாக உண்டாக்கப்பட்ட குழுவை அடிப்படையாகக்கொண்டது அல்ல.

**3. Sakewa விழா சமீபத்தில் எந்த மாநிலத்தில் கொண்டாடப்பட்டது?**

A. ஜார்க்கண்ட்

B. அருணாச்சல பிரதேசம்

C. சிக்கிம்

D. மணிப்பூர்

**விடை : C. சிக்கிம்**

ராய் சமூகத்தின் சாக்வா திருவிழா சமீபத்தில் சிக்கிமில் இயற்கை அன்னைக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக கொண்டாடப்பட்டது. இவ்விழா “பூமி பூஜை” அல்லது “சந்தி பூஜை” அல்லது “நில வழிபாடு” என்றும் அழைக்கப்படுகிறது. இது சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் உலக சக்திகளுக்கு வழிபாடு செய்யும் விதமாக செய்யப்படுகிறது. இது தவிர, கௌதம புத்தரின் பிறந்தநாளான புத்த பூர்ணிமாவையும், புத்த கயாவில் போதி மரத்தின் கீழ் ஞானம் அடைந்த நாளையும், சிக்கிமில் கொண்டாடுகின்றனர். இந்நாட்களில் மக்கள் மடாலயங்களில் வழிபாடு மேற்கொள்கின்றனர்.

**4. ஒருநாள் சர்வதேச பெண்கள் கிரிக்கெட்டில், அதிக விக்கெட் எடுத்த வீராங்கனை யார்?**

A. Mithali Raj

B. Harmanpreet Kaur

C. Ekta Bisht

D. Jhulan Goswami

**விடை : D. Jhulan Goswami**

இந்திய பெண்கள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் Jhulan Nishit Goswami, ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார். 109 போட்டிகளிலிருந்து 180 விக்கெட்டுகளை வீழ்த்திய ஆஸ்திரேலியாவின் Cathryn Fitzpatrick சாதனையை முறியடித்தார். தென்னாப்பிரிக்காவின் Potchefstroomல் நடைபெற்ற போட்டியில், தென்னாப்பிரிக்காவைச்சேர்ந்த Raisibe Ntozakheவை 181வதாக வீழ்த்தி தனது சாதனையை புரிந்துள்ளார். இது இவரது 151வது போட்டியாகும். 2007ம் ஆண்டு ICCன் 'Women Cricketer of the Year' விருதுக்கு தேர்வு செய்யப்பட்டார். இவர் 10 டெஸ்ட் போட்டிகளில் 40 விக்கெட்டுகளையும், 60 T 20 போட்டிகளில் 50 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

5. எந்த மாநில அரசு ,சமீபத்தில் பள்ளி உணவகங்களில் அதிகக்கொழுப்பு, உப்பு மற்றும் சர்க்கரை (HFSS) சேர்த்த உணவுகளின் விற்பனையை தடை செய்துள்ளது?

A. மகாராஷ்டிரா

B. பஞ்சாப்

C. உத்தர பிரதேசம்

D. மத்திய பிரதேசம்

விடை : A. மகாராஷ்டிரா

மகாராஷ்டிரா அரசாங்கம் சமீபத்தில் மாநில முழுவதுமுள்ள பள்ளி உணவகங்களில் அதிகக்கொழுப்பு, உப்பு மற்றும் சர்க்கரை (HFSS) சேர்த்த உணவுகளின் விற்பனையை தடைசெய்துள்ளது. இதில் உருளைக்கிழங்கு சீவல்கள், நூடுல்ஸ், கார்பனேற்றப்பட்ட குளிர்பானங்கள், பீட்சா, பர்கர், கேக்குகள், பிஸ்கட், பன்கள், பாஸ்தாக்கள் போன்ற 12 வகையான உணவுகள் தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும், கோதுமை ரொட்டி, காய்கறி புலவு, இட்லி, வடை, இளநீர் போன்ற 20 வகையான பொருட்களை விற்கவும் அனுமதித்துள்ளது. இந்தத்தீர்மானம், ஊட்டச்சத்து உணவு உட்கொள்வதைப்பற்றி குழந்தைகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுவதை வலியுறுத்துகிறது.

**6. 2017 New York Indian Film Festival (NYIFF)ல் சிறந்த நடிகைக்கான விருதை பெற்ற இந்திய நடிகை யார்?**

A. Ratna Pathak

B. Konkona Sen Sharma

C. Anushka Sharma

D. Ramya Krishnan

விடை : B. Konkona Sen Sharma

2017 நியூயார்க் இந்திய திரைப்பட விழாவில்(NYIFF) சிறந்த நடிகைக்கான விருதை, "Lipstick Under My Burkha" என்ற படத்திற்காக Konkona Sen Sharma பெற்றுள்ளார். இவர் தனது "A Death in the Gunj" படத்திற்காக சிறந்த இயக்குநருக்கான விருதையும் பெற்றார். சிறந்த நடிகருக்கான விருதை, "Ottayaal n Paatha" என்ற படத்திற்காக கலாதரன் பெற்றுள்ளார். Shubhashish Bhutiani சிறந்த திரைப்படத்திற்காக (முக்தி பவன்) விருது பெற்றுள்ளார். சிறந்த திரைக்கதைக்கான விருது மலையாள திரைப்படமான "Kammattipadam"க்கு கிடைத்துள்ளது. சிறந்த குறும்படமாக Onirன் "Aaba" தேர்வுசெய்யப்பட்டுள்ளது.

**7. 2017 World Thalassemia Day (WTD)வின் மையக்கருத்து என்ன?**

A. Access to Safe & Effective Drugs in Thalassemia

B. Thalassemia: Knowledge is Strength

C. Patient's Rights Revisited

D. Together for Humanity

விடை : D. Together for Humanity

2017 World Thalassemia Day (WTD)வின் மையக்கருத்து "Together for Humanity" ஆகும். இத்தினம் ஒவ்வொரு ஆண்டும் மே 8 அன்று கடைபிடிக்கப்படுகிறது. இந்தக்கொடிய நோய்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் & இரத்ததானம் தொடர்பான முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்துவதற்காகவும் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

தலசீமியா என்பது இரத்தத்திலுள்ள ஹீமோகுளோபினின் குறைபாடு அல்லது முழுவதும் இல்லாத நிலையாக வகைப்படுத்தப்பட்டுள்ள மரபணு இரத்தக்கோளாறு நோயாகும். WHOவின் அறிக்கையின்படி, மேற்கத்திய நாடுகளில் தாலசீமியாவுடன் 90%க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். இந்தியாவின் மக்கள் தொகையில் 3.9% பேர் தாலசீமியாவிற்கு ஆட்பட்டுள்ளனர். இந்த அபாயகரமான நோயை எதிர்த்துப்போராட வேண்டிய அவசியத்தை இந்நாள் வலியுறுத்துகிறது.

8. இந்தியாவுக்கான பாகிஸ்தானின் புதிய உயர் ஆணையர் யார்?

A. Husain Haqqani

B. Abdul Basit

C. Sohail Mahmood

D. Maleeha Lodhi

விடை : C. Sohail Mahmood

பாகிஸ்தானின் மூத்த தூதரகர்களில் ஒருவரான Sohail Mahmood இந்தியாவுக்கான பாகிஸ்தானின் புதிய உயர் ஆணையர் ஆகிறார். இந்தியாவில் எல்லைதாண்டி பயங்கரவாத தாக்குதல்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் மற்றும் இந்தியாவைச்சேர்ந்த Kulbhushan Jadhavக்கு மரணதண்டனை வழங்கியது தொடர்பான விசயங்களை ஆராய்ந்து பணிகளை மேற்கொள்வார். மே மாத இறுதியில் இவர் பதவியேற்பார். இவருக்கு முன் Abdul Basit இப்பதவியிலிருந்தார். தற்போது, இவர் துருக்கிக்கு பாகிஸ்தான் தூதராக செயல்பட்டு வருகிறார்.

9. சமீபத்தில் காலமான Arjun Tulshiram Pawar, எந்தத்துறையை சேர்ந்தவராவார்?

A. விளையாட்டு

B. இதழியல் (Journalism)

C. சட்டத்துறை

D.அரசியல்

விடை : D.அரசியல்

மூத்த Nationalistt Congress Party (NCP)ன் தலைவர் மற்றும் முன்னாள் மகாராஷ்டிரா அமைச்சரான Arjun Tulshiram Pawar சமீபத்தில் மும்பையில் தனது 80வது வயதில் காலமானார். 1999ல் விலாஸ்ராவ் தேஷ்முக் தலைமையிலான காங்கிரஸ்-NCP அரசாங்கத்தில் பழங்குடி மக்களின் நலனுக்காக அவர் மாநில அமைச்சராக இருந்தார். 2014 மாநில சட்ட மன்ற தேர்தலில் தோல்வியடைந்த இவர், பல ஆண்டுகளாக கல்வன் விதான சமுதாயத்தின் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவராகவும் இருந்துள்ளார்.

10. முதுமலை தேசிய பூங்கா எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A. கேரளா
B. தமிழ்நாடு
C. ஆந்திர பிரதேசம்
D. கர்நாடகம்

விடை : B. தமிழ்நாடு

முதுமலை தேசிய பூங்கா (MNP) தமிழ்நாட்டிலுள்ள கோயம்புத்தூர் நகரிலிருந்து 150 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இந்திய யானை, வங்காளப்புலி, காட்டெருமை மற்றும் இந்திய சிறுத்தை உட்பட பல ஆபத்தான மற்றும் அழிவிலிருக்கக்கக்கூடிய இனங்கள் இங்கு பாதுகாக்கப்படுகிறது. குறைந்தபட்சம் 266 வகையான பறவைகள் இந்த சரணாலயத்தில் உள்ளன. இதில் அரிதான வெள்ளை கழுத்து ராஜாளிக்கழுகு, வேட்டைக்கழுகு போன்றவையும் அடக்கம்.